**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06012021-4164

Volume: 6

Issue: 1

Month: July

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 10.03.2021

Accepted: 25.06.2021

Published: 01.07.2021

Citation:
Chandrakumar, S., et al. "A Research on The Articles Published in The 'Thenakam' Tamil Magazine During The Period 1993 – 2017." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 1, 2021, pp. 37–54.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i1.4164

*Corresponding Author:
srckumar20@yahoo.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# A Research on The Articles Published in The 'Thenakam' Tamil Magazine During The Period 1993 – 2017

**S. Chandrakumar**
*Senior Lecturer, Department of Fine Arts*
*Eastern University, Sri Lanka*

**S. Oshanithy**
*Assistant, RicAHEAD Project, Eastern University, Sri Lanka*

**A. Sujendran**
*Senior Assistant Registrar, Establishments Department*
*Eastern University, Sri Lanka*

**T. Baskaran**
*Senior Assistant Registrar, General Service Division*
*Eastern University, Sri Lanka*

**Abstract -** The "Thenakam" magazine is published from 1993 as an annual magazine by the Manmunai North Divisional Secretariat, which is among the 14 Divisional Secretariats in the Batticaloa District. The research study is carried out based on the contents, analysis perspective and description perspective on the articles published in the "Thenakam" magazine. All these articles are categorized as History, Art, performance, Literature, Folklore, Society, Individual Personality, Education and others.

History related articles are categorizedas History of Batticaloa, Ancient Society History of Batticaloa, Historical Icons of Batticaloa, Arts related articles are categorized asBatticaloa's Unique Traditional Art of "Kooththu", Drama, Dance, Art, and others are categorized as Arts Aspects Music, Astrology, "Kalikambu", Building, "Silambu", "Manthirikam" (Magic), Literature related articles are categorized as Books, Poems, Small Stories, Novels, Magazine, Folklorerelated articles are categorized as Vocal Songs, Stories, Traditional of Batticaloa, Society related articles are categorized as "Burgers", "Muslims", "Mukkukar", "Parayar", and individual personality related articles of "Master Sivalingam", "SwamyVipulananthar", "Rajaparathy", "D.G.Somasundaram", "Neelavaanan", "M.Sivapalan", "V.Ananthan", "Supathiran", "Anthonipillai", "Thiraviam", "Tambimuthu" "Pithan" are categorized.

**Key Words:** Journalism, Tamil Periodicals, Divisional Secretariat of Manumunai North, "Thenakam" magazine, Batticaloa History, Batticaloa Education, Performance, Journalism Tamil periodicals.

**References**

**Books**

1. Mohanras, A.S. (2003). An Evaluation and History in Journalism of Elam, Trincomalee, Sri Lanka, Ministry of Education Cultural Affairs Sports and Youth Affairs.

2. Thampu, S. (2008). *Contribution of Magazines in Development of Elam Art Literature*. Jaffana, Sri Lanka, Kalia-Vani Book center.
3. Editorial of Tamil Literature, (2014), Educational Publication Department, Colombo.
4. Dominic Jeeva. (2002). *Some Journals of Sustain in Chest*, Colombo, U.K, Print.
5. Special Issue – Muthamil Vila (Magazine of 'Thenakam), 1993- 2017, Cultural Council, Divisional Secretariat, Manmunai North, Batticaloa, Sri Lanka.
6. Karunaijokan (Special issue). (2016). Felicitation Ceremony Board, Sri Lanka, Batticaloa.

**Articles**

1. Ruby Valentina, F. (2017). *An Evaluation of Thenakam*, Thenakam, Divisional Secretariat, Manmunai North, Batticaloa, Sri Lanka.

# 1993 – 2017 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் வெளிவந்த "தேனகம்" தமிழ்ச் சஞ்சிகையின் கட்டுரைகள்: ஓர் ஆய்வு

***சு. சந்திரகுமார்***
சிரேஷ்ர விரிவுரையாளர், நுண்கலைத் துறை
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

***சி. ஓசாநிதி***
ஆராய்ச்சி உதவியாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

***அ. சுஜேந்திரன்***
சிரேஷ்ர உதவிப் பதிவாளர், தாபனங்கள் பகுதி
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

***த. பாஸ்கரன்***
சிரேஷ்ர உதவிப் பதிவாளர், பொதுச்சேவைகள் பகுதி
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

***ஆய்வுச் சுருக்கம்***

*மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் 14 பிரதேச செயலகப்பிரிவுகளில் ஒன்றான மண்முனை வடக்குப் பிரதேச செயலகத்தினால் 1993இல் இருந்து ஆண்டுதோறும் வெளியிடப்பட்டுவரும் ஒரு சஞ்சிகையாக "தேனகம்" சஞ்சிகை காணப்படுகிறது. "தேனகம்" சஞ்சிகைகளில் வெளிவந்துள்ள கட்டுரைகள்அவற்றின் உள்ளடக்க அடிப்படையில்' பகுப்பாய்வு நோக்கிலும் விபரண நோக்கிலும் ஆராயப்படுகின்றது. இக்கட்டுரைகளை வரலாறு, கலை, இலக்கியம், நாட்டாரியல், சமூகம், தனிநபர் ஆளுமைகள், கல்வி, ஏனையவை என்ற அடிப்படையில் வகைப்படுத்த முடியும்.*

*வரலாறு தொடர்பான கட்டுரைகள் மட்டக்களப்பின் வரலாறு, மட்டக்களப்பு புர்வீகக் குடிகளின் வரலாறு, மட்டக்களப்பு வரலாற்றுச் சின்னங்களின் வரலாறு, என்பனவற்றையும், கலை தொடர்பான கட்டுரைகள் மட்டக்களப்பின் தனித்துவமான பாரம்பரியக் கலைகளான கூத்து, நாடகம், நடனம், ஓவியம், ஏனையகலைகளான இசை, சோதிடம், களிகம்பு, கட்டிடம், சிலம்பு, மாந்திரிகம் என்னும் கலையம் சங்களையும்,இலக்கியம் தொடர்பான கட்டுரைகள் நூல்கள், கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், சஞ்சி கைகள் என்பனவற்றையும், நாட்டாரியல் தொடர்பான கட்டுரைகள் வாய்மொழிப் பாடல்கள் மற்றும் கதைகள், மட்டக்களப்பின் பாரம்பரியங்கள் என்பனவற்றையும், சமூகம் தொடர்பான கட்டுரைகள் மட்டக்களப்பில் வாழ்ந்துள்ள பறங்கியர், முஸ்லிம், முக்குவர், பறையர் சமூகங்களைக் பற்றியும், தனிநபர் ஆளுமைகள் தொடர்பான கட்டுரைகள் மாஸ்டர் சிவலிங்கம், சுவாமி விபுலானந்தர், ராஜபாரதி, டி.ஜி சோமசுந்தரம், நீலாவணன், மு. சிவபாலன், வீ. ஆனந்தன், சுபத்திரன், அந்தோனிப்பிள்ளை, திரவியம், தம்பிமுத்து பித்தன் ஆகியோரைப் பற்றியதாகவும் அமைந்துள்ளன.*

***முக்கியச் சொற்கள்:*** *இதழியல், தமிழ்ப் பத்திரிக்கைகள், மண்முனை வடக்குப் பிரதேச செயலகம், தேனகம் சஞ்சிகை, மட்டக்களப்பின் வரலாறு, மட்டக்களப்பின் கல்வி.*

**உள்ளடக்க அடிப்படையில் தேனகக் கட்டுரைகள்**

**1. வரலாறு**

"தேனகம்" சஞ்சிகையில் வெளிவந்த வரலாற்றுக் கட்டுரைகள் மட்டக்களப்பின் வரலாறு, மட்டக்களப்பு பூர்வீகக் குடிகளின் வரலாறு, மட்டக்களப்பு வரலாற்றுச் சின்னங்களின் வரலாறு என்பவற்றை வெளிப்படுத்தியுள்ளன.

**மட்டக்களப்பின் வரலாறு**

மட்டக்களப்பின் வரலாற்றை க. தங்கேஸ்வரியின் "மட்டக்களப்பின் தொல்லியல் தடயங்கள்: ஓர் அறிமுகம்", வ. சிவசுப்பிரமணியத்தின் "மட்டக்களப்பு சில குறிப்புக்கள்", மற்றும் மட்டக்களப்பு தேசத்திற்கும் சோழர்களுக்கும் இருந்த தொடர்புகளும் புளியந்தீவு அதன் தலைநகராகிய வரலாறும்", வெல்லூர்க் கோபாலனின் "மட்டக்களப்பு மரபும்- ஆட்சி முறையும்" முதலான கட்டுரைகள் வெளிப்படுத்தியுள்ளன.

**"தங்கேஸ்வரியின்" மட்டக்களப்பின் தொல்லியல் தடயங்கள்**

ஓர் அறிமுகம் என்னும் கட்டுரை, மட்டக்களப்புப் பிரதேசத்தை வரலாற்றுக்கு முற்பட்ட காலம், வரலாற்றுக்கு இடைப்பட்ட காலம், வரலாற்றுக்காலம் என்றவாறு பாகுபடுத்தி அக்காலகட்டத்தில் கிடைக்கப்பெற்ற தொல்பொருள் தடயங்களைக் கொண்டு மட்டக்களப்பின் வரலாற்றினை வெளிப்படுத்தியுள்ளது.

வ. சிவசுப்பிரமணியத்தின் "மட்டக்களப்பு தேசத்திற்கும் சோழர்களுக்கும் இருந்த தொடர்புகளும் புளியந்தீவு அதன் தலைநகராகிய வரலாறும்" என்னும் கட்டுரை, மட்டக்களப்பானது 17ம் நூற்றாண்டில் செழிப்பான பிரதேசமாக இருந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. அதாவது சேர, சோழ, பாண்டியர் வாழ்ந்துள்ளதாகவும், இவர்களின் போக்குவரத்து ஊடகமாக மட்டக்களப்பு வாவி இருந்துள்ளதாகவும், இதன் மூலம் கறுவா, ஏலம், யானைத்தந்தங்கள், மிளகு, அரிசி, சந்தணம், அகில் போன்ற பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்ததாகவும், சோழர்கள் பொலநறுவையில் சிவன் கோயில்களை அமைத்துள்ளதன் தொடர்ச்சியாய் மட்டக்களப்பிலும் கொக்கட்டிச்சோலை சிவன்கோயில், அமைக்கப்பட்டிருந்ததாகவும் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

"மட்டக்களப்பு சில குறிப்புக்கள்" என்னும் கட்டுரை, புராதன மட்டக்களப்பு தொடர்பாக சில முக்கியமான வரலாற்றுக் குறிப்புக்களை முன்வைத்துள்ளது. 1958இல் மட்டக்களப்பில் பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளதாகவும், 1907 இல் சூறாவளி ஏற்பட்டுள்ளதாகவும், துட்டகைமுனு வாழ்ந்த காலத்தில் (கி.மு 161 - 137) மட்டக்களப்பின் மேற்குக் கரையோரத்தில் சிற்றரசுகள் இருந்துள்ளதாகவும் கூறுகிறது. வெல்லூர்க் கோபாலனின்" மட்டக்களப்பின் மரபும் மாற்றமும்: ஆட்சி முறைகள்" என்னும் கட்டுரை, மட்டக்களப்பில் குழுநிலை ஆட்சிமுறை (கி.மு 500), குறுநில ஆட்சி முறை (கி.மு 3ம் நூற்றாண்டில்) மாகோன்கால வன்னிமை நிருவாக முறைமை (கி.பி 1215இல் கலிங்கமாகனின் ஆட்சி), போர்த்துக்கேயர் (கி.பி 1622) மற்றும் ஒல்லாந்தர் ஆட்சி (கி.பி 1638), ஆங்கிலேயர்ஆட்சி (கி.பி 1802) ஆகிய ஆட்சிமுறைகள் இடம்பெற்றுள்ளதாகக் கூறியுள்ளது.

**மட்டக்களப்பின் பூர்வீகக் குடிகளின் வரலாற்று**

மட்டக்களப்பின் பூர்வீகக் குடிகளின் வரலாற்றினை க.தங்கேஸ்வரியின் "கிழக்கிலங்கையில் தமிழர் ஆட்சி", வெல்லூர்க் கோபாலனின் "பூர்வீகக் குடிகளும் குடியேற்றங்களும், மற்றும் "மண்முனை வடக்குப் பிரதேசத்தின் அறியப்பட்டதும், அறியப்படாததும்" றூபி வலன்ரீனா பிரான்சிஸின்" மட்டக்களப்பின் புர்வீக வரலாறு: தெளிவை வேண்டி

நிற்கும் சில பிரச்சினைகள் குறித்த அவதானிப்புக்கள்" முதலான கட்டுரைகள் வெளிப்படுத்தியுள்ளன.

க. தங்கேஸ்வரியின்" கிழக்கிலங்கையில் தமிழர் ஆட்சி" என்னும் கட்டுரை, கிழக்கிலங்கையில் உதாரணமாக உகந்தை, திருக்கோவில், திருமலை, வாகரை போன்ற பிரதேசங்களில் இயக்கர், நாகர், என்ற திராவிட வகுப்பினர் வாழ்ந்தபோது அவர்களது ஆட்சி நிலவியுள்ளதென்றும், பின்னர் கி.மு 3ம் நூற்றாண்டு முதல் திருகோணமலை, மட்டக்களப்பு, சம்மாந்துறை, உன்னரசுகிரி, நாகர்முனை போன்ற பிரதேசங்களில் பல தமிழ் இராச்சியங்கள் இருந்துள்ளது என்றும், ஸ்ரீ குலசேனன், கூத்திகன், சேனன், ரஞ்சன், தாசன் போன்ற தமிழ் மன்னர்கள் ஆட்சி இடம்பெற்றுள்ளது என்றும், "மட்டக்களப்பு மான்மியம்" என்ற நூலினை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது.

வெல்லூர்க் கோபாலனின் "பூர்வீகக்குடிகளும் குடியேற்றங்களும்" என்னும் கட்டுரை, மட்டக்களப்பின் பூர்வீகக் குடிகள் மற்றும் குடியேற்றங்கள் பற்றிய தகவல்களைக் கூறியுள்ளது. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் தரும் தகவல்களை அடிப்படையாகக்கொண்டு நோக்கும்போது மாகோன் எனப்படுவது புலியமாறன் என்றும், புலியமாறன் புளியந்தீவில் கோட்டை அமைத்துள்ளதால் அக்கோட்டை புளியந்தீவுக் கோட்டை என்றும் அழைக்கப்பட்டுள்ளதாக அறியமுடிந்துள்ளது.

றூபி வலன்ரீனா பிரான்சிஸின்" மட்டக்களப்பின் பூர்வீக வரலாறு: தெளிவை வேண்டி நிற்கும் சில பிரச்சினைகள் குறித்த அவதானிப்புக்கள்" என்னும் கட்டுரை, மட்டக்களப்பின் பூர்வீக வரலாறு தொடர்பாக சில வினாக்களை எழுப்பி அதற்கான தெளிவான விடைகளை வேண்டி நிற்பதைக் காணலாம். அதாவது ஜோன் அழகக்கோன் மட்டக்களப்பு வரலாறு பற்றிய உரையில் (1872. 10. 20) மட்டக்களப்பின் வரலாறு தொடர்பாக பதிவேடுகளையோ, புத்திக்கூர்மையான வயது வந்த உள்ளூர்வாசிகளையோ காணமுடியாததால் மட்டக்களப்பு வரலாறு பற்றி தெளிவாக முன்வைக்க முடியவில்லை எனக் கூறியுள்ளார். இக்கூற்றானது மட்டக்களப்பு பூர்வீக வரலாறு குறித்த தெளிவை வேண்டி நிற்கின்றது.

### மட்டக்களப்பு வரலாற்றுச் சின்னங்களின் வரலாறு

மட்டக்களப்பு வரலாற்றுச்சின்னங்களின் வரலாற்றினை வெளிப்படுத்தும் கட்டுரைகளில் டச்சுக்கோட்டை, இரும்பிலாலான பாரந்தூக்கி, துறைமுகம், வெளிச்சவீடு, வணக்க ஸ்தலங்கள், கட்டிடங்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பின் வரலாற்றுச் சின்னங்களை, மௌ. சித்திரலோகாவின் மட்டக்களப்பின் வரலாற்றுச் சின்னங்கள் என்னும் கட்டுரை, வெளிப்படுத்தியுள்ளது. இக்கட்டுரை வெளிப்படுத்தியுள்ள வரலாற்றுச் சின்னங்களாவன டச்சுக்கோட்டை, இரும்பிலான பாரம்தூக்கி, கல்லடிப்பாலம், வெளிச்சவீடு, வீடுகள், வணக்க ஸ்தலங்கள், கட்டிடங்கள் என்பனவாகும்.

மட்டக்களப்பின் டச்சுக்கோட்டையின் வரலாற்றை க. தங்கேஸ்வரியின் "மட்டக்களப்பிலுள்ள போர்த்துக்கேய டச்சுக் கோட்டை" என்னும் கட்டுரை வெளிப்படுத்தியுள்ளது. ரீ. பாக்கியநாயகத்தின் "கப்பல் போக்குவரத்திற்கு உகந்த இடம் மட்டக்களப்பு" என்னும் கட்டுரை, மட்டக்களப்பின் அமைப்பானது கப்பல் போக்குவரத்திற்கு மிகவும் உகந்ததாக காணப்பட்டுள்ளதென்றும், 1888இல் இங்கிலாந்தில் இருந்து கொண்டுவரப்பட்ட "லேடி கோர்டன்" என்னும் கப்பல் முதன்முதலில் மட்டக்களப்பில் கப்பல் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ளதென்றும், அக்கப்பல் மட்டக்களப்பிற்கு அருகேயுள்ள கடலில்

ஒரு பாறையில் மோதி விபத்துக்குள்ளானதென்றும் கூறியுள்ளது.

மட்டக்களப்பின் வெளிச்சவீடு தொடர்பான வரலாற்றை ப. முரளிதரனின் "மட்டக்களப்பு கலங்கரை விளக்கு" என்னும் கட்டுரை, வெளிப்படுத்தியுள்ளது. மட்டக்களப்பிலுள்ள வணக்கஸ்தலங்களுள் இந்துசமயக் கோயில்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், முஸ்லிம் பள்ளிவாசல்கள் என்பவற்றின் வரலாறுகளையும் சில கட்டுரைகள் முன்வைத்துள்ளன. அந்த வகையில் எஸ். எதிர்மன்ன சிங்கத்தின்" மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் வரலாற்றுப் புகழ் மிகு சமய வழிபாட்டுத் தலங்கள்" என்னும் கட்டுரை, மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் வரலாற்றுப் புகழ் மிகு சமய வழிபாட்டுத் தலங்கள் காணப்பட்டுள்ளதை இனங்காட்டியுள்ளது.

**கலை**

"தேனகம்" சஞ்சிகையில் வெளிவந்துள்ள கலைகள் தொடர்பான கட்டுரைகள் மட்டக்களப்பின் தனித்துவமான பாரம்பரியக் கலைகளான கூத்து, நாடகம், நடனம், ஓவியம், ஏனையகலைகளான இசை, சோதிடம், களிகம்பு, கட்டிடம், சிலம்பு, மாந்திரீகம் என்னும் கலையம்சங்களை வெளிப்படுத்தியுள்ளன.

**கூத்துக்கலை**

கூத்துக்கலை தொடர்பாக சி. மௌனகுருவின் "மட்டக்களப்பின் மகிடி நாடகம் ஒரு அறிமுகம்", "அர்த்தமுள்ள அடியெடுப்புக்கள்" என்னும் கட்டுரைகள். ச. சீவரட்ணத்தின்" காத்தவராயன் கூத்து தோற்றமும் ஒப்பீடும்", த. ஹேமாமின் "பாரம்பரியக் கூத்துக் கலையில் முகாமைத்துவம்", ஸ்ரான்லி பிரபாகரனின்" மட்டக்களப்பில் கிறிஸ்தவக் கூத்துக்கள்", எம்.பி ரவிச்சந்திராவின் "ஈழத்துத் தமிழ் கூத்தரங்கு வளர்ச்சி நிலை- ஒரு நோக்கு", முரளிதரனின் "மட்டக்களப்பில் மரபும் மாற்றமும் மரபுக் கலைகளும் மாற்றமும்", மு. நமசிவாயத்தின் "தமிழினத்தின் பாரம்பரிய கலையிருப்பு கூத்து", சி. ஜெயசங்கரின்" களரியில் கோமாளியும் ஈழக்கூத்தின் மீளுருவாக்கமும்: சமூக நீதிக்கும் சமூக ஒன்றிணைவிற்குமான கூத்தரங்கின் இயக்கம்" மற்றும் புதசக்திகளை எதிர்கொள்ளும் சாதாரணர் சரித்திரங்கள்", முதலான கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. சி. மௌனகுருவின் "மட்டக்களப்பின் மகிடி நாடகம் ஒரு அறிமுகம்" என்னும் கட்டுரை, மகிடிநாடகத்தை மூன்று வகையாகப் பாகுபடுத்தி அவற்றின் சிறப்புக்களைக் கூறியுள்ளது. "காத்தவராயன் கூத்து தோற்றமும் ஒப்பீடும்" என்னும் கட்டுரை, காத்தவராயன் கூத்தின் தோற்றத்தையும் மட்ஃ வெல்லாவெளி காத்தவராயன் கூத்தை ஏனைய வடபகுதி, தென்னிந்திய காத்தவராயன் கூத்துக்களுடன் ஒப்பிட்டும் கூறியுள்ளது. ஸ்ரான்லி பிரபாகரனின் "மட்டக்களப்பில் கிறிஸ்தவக் கூத்துக்கள்" என்னும் கட்டுரை, மட்டக்களப்பில் கிறிஸ்தவக் கூத்துக்கள் ஆடப்பட்டமைக்கான தரவுகளை வெளிக்கொண்டு வருவதோடு அதன் அளிக்கை முறைகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

சி. ஜெயசங்கரின்" களரியில் கோமாளியும் ஈழக்கூத்தின் மீளுருவாக்கமும்: சமூக நீதிக்கும் சமூக ஒன்றிணைவிற்குமான கூத்தரங்கின் இயக்கம்" என்னும் கட்டுரை, கத்தோலிக்கக் கூத்துக் களரியில் "கோமாளி"ப் பாத்திரத்தின் மீள்வருகையின் இன்றியமையாமையைக் கூறியுள்ளது. த. ஹேமாவின் "பாரம்பரியக் கூத்துக்கலையில் முகாமைத்துவம்" என்னும் கட்டுரை, கூத்துக் கலையில் முகாமையாளரின் பணிகளைக் கூறியுள்ளது. சி. மௌனகுருவின்" ஆற்றுகைக் கலையாக கண்ணகி குளிர்த்திப் படைப்புக்கள்" என்னும் கட்டுரையில் கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறையினால் உருவாக்கப்பட்ட "கண்ணகி குளிர்த்தி" என்னும் நாடகத்தின் படைப்பனுபவங்களை ஆசிரியர் (சி. மௌனகுரு) வெளிப்படுத்தியுள்ளார்.

ப. முரளிதரனின் "மட்டக்களப்பில் மரபும் மாற்றமும்- மரபுக் கலைகளும் மாற்றமும்" என்னும் கட்டுரை, நவீனத்துவச் சிந்தனைகள் உள்வாங்கப்பட்டதனால் மரபுக்கலைகளில் ஏற்பட்ட மாற்றங்களைக் கூறியுள்ளது.

**நாடகம்**

நாடகக்கலையை வெ. தவராசாவின் "மட்டக்களப்பில் நவீன நாடகங்கள் - ஒரு நோக்கு", தி. லலினி, அ.ர. பிரான்சிஸின் "மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆங்கில நாடகத்துறையின் அண்மைக்கால வளர்ச்சி", வாசுதேவனின் "உலகமயமாக்கலின் பின்னணியில் உள்ர் சிறுவர் அரங்கு" முதலான கட் டுரைகள் வெளிப்படுத்தியுள்ளன.

வெ. தவராசாவின் "மட்டக்களப்பில் நவீன நாடகங்கள் - ஒரு நோக்கு" என்னும் கட்டுரை, நவீன நாடகங்கள் என்பது உரையாடலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு நடிக்கப்படும் நாடகங்கள் என்றும், மட்டக்களப்பில் நவீன நாடகங்கள் ஜனரஞ்சகமானதாக அமைந்துள்ளதென்றும், 1970களில் மட்டக்களப்பில் நவீன நாடகங்கள் பற்றிய விழிப்புணர்வு இல்லாதிருந்ததால் பொழுதுபோக்காக நடிக்கப்பட்டுள்ளதென்றும், 1980களில் மட்டக்களப்பில் நவீன நாடக முயற்சி கைவிடப்பட்டுள்ளதென்றும், 1990களுக்குப் பின்பு மட்டக்களப்பில் நவீன நாடக முயற்சிகள் இடம்பெற்றுள்ளதென்றும் கூறியுள்ளது. இதனூடாக மட்டக்களப்பில் நவீன நாடக முயற்சிகள் 1990களுக்குப் பின்பே சிறப்பானதொரு வளர்ச்சியைப் பெற்றுள்ளதென்பது வெளிப்பட்டுள்ளது. தி. லலினி, அ.ர. பிரான்சிஸின்" மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆங்கில நாடகத்துறையின் அண்மைக்கால வளர்ச்சி" என்னும் கட்டுரை, 1991 தொடக்கம் மட்டக்களப்புப் பிரதேசத்தில் இத்துறைக்கு பாடசாலைகள் ஆற்றிய பங்களிப்பினை நிறுவியுள்ளது. அத்துடன் பாடசாலைகளுக்கும் கிழக்குப்பல்கலைக் கழகத்திற்கும் இடையிலான தொடர்புகள் மட்டக்களப்பின் குறித்த நாடகத்துறை வளர்ச்சிக்கு உதவியமை, ஆங்கிலக் கல்வியினை பிரத்தியேகமாகப் போதிக்கும் தனியார் கல்வி நிறுவனங்களின் ஒத்துழைப்பு ஆகிய விடயங்களையும் குறிப்பிடப்பட்டுள்ளது. (றூபி வலன்ரீனா பிரான்சிஸ், 2016-2017:75) இதனூடாக இக்கட்டுரை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆங்கில நாடகத் துறையின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆராயப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தியுள்ளது.

**நடனம்**

நடனக்கலையை ர. சர்மிளாவின் "இலங்கையில் நடனக்கலை", ர. பிரேமளாதேவியின்" பரதக்கலை ஓர் அறிமுகம்", சி. மலர்விழியின் "தொன்மைமிகு தொல்காப்பியத்தில் நயக்க வைத்த நடனம்" முதலான கட்டுரைகள் வெளிப்படுத்தியுள்ளன. ர. சர்மிளாவின்" இலங்கையில் நடனக்கலை" என்னும் கட்டுரை, இலங்கையில் நடனக்கலை எவ்வாறு வளர்ச்சி பெற்றுள்ளதென்பதைக் கூறியுள்ளது. அந்தவகையில் ஆரம்பத்தில் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் முதலிய புராதன ஆலயங்களில் தேவரடியார்கள் இசை, நடனப் பணிகளை மேற்கொண்டுள்ளதாகவும், அதனையடுத்து யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் ஆட்சிக் காலத்தில் ஆடல், பாடல் என்பன இடம்பெற்றுள்ளதாகவும், 19ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் தேவதாசிகள் நடனக்கலையைப் பயின்றுள்ளதாகவும், கூறியுள்ளது.

ர. பிரேமளாதேவியின் "பரதக்கலை ஓர் அறிமுகம்" என்னும் கட்டுரை, ஆயகலைகள் அறுபத்து நான்கிலும் முதன்மையான கலையாக நடனக்கலை விளங்குவதாகவும், இது "ரிக்" வேதத்திலிருந்து தோற்றம் பெற்றுள்ளதாகவும் கூறியுள்ளது. குறிப்பாக, இக்கட்டுரை நடனக்கலை தொடர்பான

ஒரு சுருக்கமான அறிமுகமாக அமைந்துள்ளது. சி. மலர்விழியின்" தொன்மைமிகு தொல்காப்பியத்தில் நயக்க வைத்த நடனம்" என்னும் கட்டுரை, தொல்காப்பியத்தில் ஐந்து வகையான கூத்துக்கள் இருப்பதை வெளிப்படுத்தியுள்ளது.

### ஓவியம்

ஓவியக்கலையை பவானின் "மட்டக்களப்பில் ஓவியக்கலை", சி. ஜெயசங்கரின் "ஈழத்தமிழரது பாரம்பரிய ஓவிய வரலாறு: ஓர் அறிமுகக் குறிப்பு", சிக்காக்கோவின் "நமக்கான ஓவியம்", ஜெஸ்மி எம்மூஸின் "நீக்ரோவியம்: ஒரு பண்பாட்டு எதிர்ப்பில்" முதலான கட்டுரைகள் வெளிப்படுத்தியுள்ளன. பவானின் "மட்டக்களப்பில் ஓவியக்கலை" என்னும் கட்டுரை, மட்டக்களப்பில் குறிப்பிடத்தக்க ஓவியக்கலைஞர்கள் ஓவியக்ககலையை வளர்த்துள்ளதைக் கூறியுள்ளது. உதாரணமாக வேலாயுதம் பிள்ளை, அருந்ததி, கமலச்சந்திரன், சஞ்சீவ், ரூபன், கிக்கோ, வேல்முருகு, டானியல், மேகவண்ணன் ஆகியோர்களைக் குறிப்பிட்டுள்ளது.

சி. ஜெயசங்கரின்" ஈழத்தமிழரது பாரம்பரிய ஓவிய வரலாறு: ஓர் அறிமுகக் குறிப்பு" என்னும் கட்டுரை, ஈழத்தமிழர்களுக்கானதொரு தனித்துவமான பாரம்பரிய ஓவிய வரலாறு இருந்துள்ளதைப் பதிவு செய்துள்ளது. 1950கள் காலப்பகுதியில் இலங்கையில் பொலநறுவையில் கட்டப்பட்ட சிவாலயங்கள் அழகிய சிற்பங்களால் அமைக்கப்பட்டுள்ளதாகவும், அத்தோடு இன்றும் புகழ் பெற்று விளங்கும் அனுராதபுர ஆயிரங்கால் மண்டபம், தம்புள்ள குகைக் கோயில், சிகீரியா போன்ற வராற்றுச் சிறப்புமிக்க சின்னங்களில் ஓவியங்கள் காணப்பட்டுள்ளதாகவும், இவற்றோடு சுவரோவியங்கள், குகை ஓவியங்கள், கோலம் போடுதல், பெட்டிக் கரத்தை ஓவியங்கள் என்னும் ஓவியங்கள் காணப்பட்டுள்ளதாகவும் இக்கட்டுரை முன்வைத்துள்ளது. இதனூடாக 1950களில் ஈழத்தமிழரது பாரம்பரிய ஓவிய வரலாற்றினை அறியமுடிந்துள்ளது.

சிக்காக்கோவின் "நமக்கான ஓவியம்" என்னும் கட்டுரை, ஈழத்து ஓவியப்பரப்பில் பல்வேறுபட்ட ஓவியப் போக்குகள் காணப்பட்டுள்ளதை வெளிப்படுத்தியுள்ளது. அந்தவகையில் ஈழத்து ஓவிய மரபானது பிரயோக ஓவியமரபாக அமைந்துள்ளதாகவும், உதாரணமாக பொருட்களில் அமைக்கப்படும் ஓவியம், உடைகளில் அலங்காரம் என்பனவற்றைக் குறிப்பிட்டுள்ளது. ஈழத்து ஓவியர்கள் ஐரோப்பிய ஓவியப் பாரம்பரியத்தை பின்பற்றியமையால் ஈழத்து ஓவிய மரபானது ஐரோப்பிய மொழியை ஓவிய மொழியாகக் கொண்டுள்ளதாகவும் இக்கட்டுரை கூறியுள்ளது. இதனூடாக ஈழத்து ஓவிய வரலாற்றில் ஐரோப்பியர்களின் தாக்கம் இருந்துள்ளதாக அறிய முடிந்துள்ளது. ஜெஸ்மி எம்மூஸின் "நீக்ரோவியம்: ஒரு பண்பாட்டு எதிர்ப்பில்" என்னும் கட்டுரை, நீக்ரோவியம் என்பது உலகளாவிய ரீதியில் கறுப்பினத்தவர்களின் உரிமைகளைப் பேச எழுந்த ஒரு பண்பாட்டு எதிர்ப்பின் வெளிப்பாடாகும் என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

### ஏனைய கலைகள்

ஏனைய கலைகளான இசைக்கலை, சோதிடக்கலை, களிகம்பு, கட்டிடக்கலை, சிலம்படி, மாந்திரிகம், சினிமா முதலிய கலைகள் குறித்து இக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இது இக்கலைகளின் சிறப்புக்களை பிற்கால தலைமுறையினரும் அறிந்து கொள்ள வழிவகுக்கிறது. சி. முருகப்பாவின் "மட்டு நகரில் இசைப்பாரம்பரியம்" என்னும் கட்டுரை, அவரது வாழ்வனுபவத்தினூடாக மட்டக்களப்பில் இசை வரலாற்றின் தோற்றுவாயைத் தந்துள்ளது. ஜெ. பிரியதர்சினியின் "மட்டக்களப்பு மக்களும் மரபுசார் சடங்கிசை வடிவங்களும்" என்னும்

கட்டுரை, இன்னுமொரு தளத்தில் மட்டக்களப்பின் பாரம்பரிய இசை வடிவங்களைக் கூறியுள்ளது. தே. அலோசியஸின் "வர்த்தக சினிமாக்களில் இளைஞர்கள்" என்னும் கட்டுரை, சினிமா எனப்படுவது ஒரு ஊடகம் என்றும், ஆரம்பகாலச் சினிமாக்கள் சித்திரங்களாகவும், பின்னர் புகைப்படங்களாகவும், அதன்பின்னர் அசையும் படங்களாகவும் (ஊமைப்படங்கள்), இறுதியில் பேசும் படமாக சினிமாக்கள் விரிவடைந்துள்ளதாகவும், இன்றை காலகட்டத்தில் சினிமா பார்ப்பதில் அதிகவில் ஈடுபடுவது இளைஞர்கள் என்றும் கூறுவதாக அமைந்துள்ளது.

ஸ்ரான்சி பிரபாகரனின் "பாலுமகேந்திராவின் இன்னொரு முகம்" என்னும் கட்டுரை, சினிமாத்துறையின் மூலம் மட்டக்களப்பின் பெருமையினை உலகறியச் செய்த பாலுமகேந்திரா பற்றியதாக அமைந்துள்ளது. அ.ல. ரியலாஸின் "மண்" இலங்கைத் தமிழ் சினிமா அடுத்த கட்ட நகர்விற்கு" என்னும் கட்டுரை, இலங்கையில் வெளிவந்த "மண்" சினிமா பற்றிய விமர்சனமாக அமைகிறது. இத்திரைப்படம் தலித்துக்களின் சாதி ஒடுக்கு முறையின் எதிர்ப்புக் குரலாக அமைந்துள்ளது.

எஸ். தெய்வநாயகத்தின் மட்டக்களப்பில் சோதிடக்கலை தொடர்பாக "மட்டக்களப்பில் சோதிடக்கலை" என்னும் கட்டுரை காணப்பட்டுள்ளது. இக்கட்டுரை மட்டக்களப்பில் வாழும் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் பிறப்பு, இறப்பு, திருமணம், ருது ஜெனனம் போன்ற அனைத்து நடவடிக்கைகளிலும் சோதிடர்களை நாடுவதாவும், மட்டக்களப்பில் வெற்றிலைச் சோதிடம், கிரகநிலைச் சோதிடம், கைரேகை ஆகிய சோதிடங்கள் இருப்பதாகவும் கூறியுள்ளது.

சாந்தி முஹித்தீனின்" முஸ்லிம்களின் பண்பாட்டுக் கலையில் "களிகம்பு" என்னும் கட்டுரை, முஸ்லிம் மக்களின் மத்தியில் ஹஜ்ஜீப் பெருநாள் காலங்களிலும், நோன்புப் பெருநாள் காலங்களிலும் "களிகம்பு" ஆட்டம் இடம்பெற்றுள்ளதைக் கூறியுள்ளது. ஸ்ரான்சி பிரபாகரனின்" மட்டக்களப்பின் மரபும் மாற்றமும்: கட்டிடக்கலை" என்னும் கட்டுரை, மட்டக்களப்பில் காணப்படும் பல வகையான கட்டிடங்களை பட்டியற்படுத்தியுள்ளது. உதாரணமாக இந்துக் கோயில்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், வீடுகள், பாடசாலைகள், வைத்தியசாலை, புகையிரத நிலையம், வங்கிகள், வீதிகள், கோட்டை, பாலம் என்பனவற்றை குறிப்பிட்டுள்ளது.

ஆ. கணபதிப்பிள்ளையின் "சிலம்பு விளையாட்டு ஓர் அறிமுகம்" என்னும் கட்டுரை, சிலம்பு விளையாட்டு கோயில்களிலும் ஊர்வலங்களிலும் விளையாடப்பட்டுள்ளதாகவும் அதன் பயிற்சி முறையைக் கூறுவதாகவும் அமைந்துள்ளது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள கட்டுரைகள் மட்டக்களப்பில் வழங்கும் தனித்துவமான கலைகள் பற்றியதாக அமைந்துள்ளன.

## இலக்கியம்

"தேனகம்" சஞ்சிகையில் இலக்கியம் தொடர்பான கட்டுரைகள் நூல்கள், கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், சஞ்சிகைகள் என்பனவற்றை வெளிப்படுத்தியுள்ளன.

## நூல்கள்

நூல்கள் தொடர்பாக செ. யோகராசாவின் "மட்டக்களப்பு பிரதேச நூல் வெளியீட்டு முயற்சி", "தொண்ணூறுகளின் பின் மட்டக்களப்புப் பிரதேச நவீன கலை இலக்கிய முயற்சிகள்", த. மேகராசாவின் "ஈழத்தில் எழுந்த நூல்களுள் கண்ணகி வழக்குரை", இ. கமலநாதனின் "இராமர் அம்மானை இராமர் கதை", முருகு தயாநிதியின் "இராமர் அம்மானை ஒரு பார்வை", முதலான கட்டுரைகள் அமைந்துள்ளன.

செ. யோகராசாவின்" மட்டக்களப்பு பிரதேச நூல் வெளியீட்டு முயற்சி" என்னும் கட்டுரை, மட்டக்களப்புப் பிரதேச நூல் வெளியீட்டு முயற்சிகள் பற்றியதாக அமைந்துள்ளது. அந்தவகையில் மட்டக்களப்பு பிரதேச முதல் நாவலான "அரங்கநாயகி" (1943), "மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்" (1988 - விபுலம் வெளியீடு), "எக்ஸில்" வெளியீடு, நிறுவனம் சார்ந்த வெளியீட்டு முயற்சிகள் உதாரணமாக தமிழ் மன்ற வெளியீடு, கிழக்குப் பல்கலைக்கழக வெளியீடு போன்ற நூல் வெளியீட்டு முயற்சிகளும் மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளதை இக்கட்டுரை கூறியுள்ளது.

"தொண்ணூறுகளின் பின் மட்டக்களப்புப் பிரதேச நவீன கலை இலக்கிய முயற்சிகள்" என்னும் கட்டுரை, தொண்ணூறுகளின் பின் மட்டக்களப்புப் பிரதேச நவீன கலை இலக்கிய முயற்சிகளாக நவீன கவிதை, சிறுகதை, நவீன நாடகம், ஆய்வுத்துறை, நாட்டாரியல், நவீன ஓவியம், நவீன சினிமா, நூல் வெளியீடுகள் என்பனவற்றைக் கூறியுள்ளது.

த. மேகராசாவின் "ஈழத்தில் எழுந்த நூல்களுள் கண்ணகி வழக்குரை" என்னும் கட்டுரை, கண்ணகி வழக்குரையின் பதிப்பு முயற்சிகள் மற்றும் அமைப்பு பற்றியதாக அமைந்துள்ளது. பதிப்பு முயற்சிகள் பற்றி நோக்கும்போது முதலில் சுவாமி விபுலானந்த அடிகள் (1947) கண்ணகி வழக்குரைப் பாடல்களை பத்திரிகையில் வெளியிட்டுள்ளதாவும், அதன்பின்பு 1968இல் வீ.சி. கந்தையா பாடபேதம், அடிக்குறிப்புக்களுடன் பதிப்பித்துள்ளதாகவும், அதனையடுத்து சகவீரன் பதிப்பித்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு பதிப்பு பற்றிய தகவல்களை முன்வைத்துள்ளது. இதன் அமைப்பு பற்றி நோக்கும்போது கண்ணகி வழக்குரை காதை முதல் குளிர்ச்சிக் காதை வரையிலான காதைகள் மற்றும் 11 கதைகள், 2226 செய்யுட்கள் என்பன காணப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளன.

இ. குமலநாதனின் "இராமர் அம்மானை இராமர் கதை", முருகு தயாநிதியின்" இராமர் அம்மானை ஒரு பார்வை" ஆகிய இரண்டு கட்டுரைகளும் மட்டக்களப்பு வாழ் மக்கள் மத்தியில் இராமர் அம்மானை, இராமர் கதை வசனம் ஆகிய இரண்டும் ஆலயங்களில் பாடப்பட்டுள்ளதைக் கூறியுள்ளது.

**கவிதைகள்**

கவிதைகள் தொடர்பாக வீ. ஆனந்தனின்" மட்டக்களப்பில் நவீன கவிதை", மௌ. சித்திரலேகாவின்" மட்டக்களப்பில கவிதைப் பாரம்பரியம்: விவாதத்திற்கு அடிப்படையான சில அவதானங்கள்", செ. யோகராசாவின்" தமிழ்த் தேசியமும் மட்டக்களப்புப் பிரதேசக் கவிஞர்களும்", "புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை: மட்டக்களப்புப் பிரதேச நவீன கவிதையின் ஊற்றுக்கால்", "மண்முனை வடக்குப் பிரதேசத்தில் நவீன கவிதை: மரபும் மாற்றமும்" முதலான கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

வீ. ஆனந்தனின் "மட்டக்களப்பில் நவீன கவிதை" என்னும் கவிதை, மட்டக்களப்பின் நவீன கவிதை வளர்ச்சிப் போக்குகளையும் முக்கியம் பெறும் கவிஞர்களைக் இனங்காட்டியுள்ளது. மௌ. சித்திரலேகாவின் 'சுமட்டக்களப்பில் கவிதைப் பாரம்பரியம்: விவாதத்திற்கு அடிப்படையான சில அவதானங்கள்சுசு என்னும் கட்டுரை மட்டக்களப்புப் கவிதைப் பாரம்பரியமானது வாய்மொழி, எழுத்து ஆகிய இரண்டு பாரம்பரியங்களையும் கொண்டுள்ளதென்றும், இவ்விரண்டு பாரம்பரியங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டுள்ளதென்றும் கூறியுள்ளது. செ. யோகராசாவின் "தமிழ்த் தேசியமும்

மட்டக்களப்புப் பிரதேசக் கவிஞர்களும்" என்னும் கட்டுரை, தமிழ் தேசிய கவிதை ஓட்டத்தில் குறிப்பாக முதற்காலப்பகுதியில் (1950 - 1975) மட்டக்களப்பு பிரதேசக் கவிஞர்களின் பங்களிப்பு கணிசமாயிருந்தது என்பதை தெளிவுபடுத்தியுள்ளது.

செ.யோகராசாவின் "புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை: மட்டக்களப்புப் பிரதேச நவீன கவிதையின் ஊற்றுக்கால்" என்னும் கட்டுரை, உள்ளடக்கரீதியில் புலவர்மணியின் கவிதைகள் எவ்வாறு நவீன கவிதையின் பண்புகளைப் பெற்றுள்ளன என்பதை ஆராய்ந்துள்ளது. பா. பிரதீபாவின் "தமிழ் இலக்கிய கவிதைப் பரப்பில் மகாகவி பாரதி" என்னும் கட்டுரை, தமிழிலக்கிய வரலாற்றில் புதியதொரு சகாப்தத்தை ஏற்படுத்திய கவிஞர், மாகவி பாரதியின் கவிதைகளை வெளிப்படுத்தியுள்ளது. இ. ரமேஷின் "நவீன ஈழத்துக் கவிதைகளில் வாசுதேவனின் இருப்பும் இடமும்" என்னும் கட்டுரை, ஈழத்து நவீன கவிதையில் முக்கியத்துவம் பெற்றுள்ள வாசுதேவனின் "வாழ்ந்து வருதல்" என்னும் கவிதைத் தொகுப்பின் விமர்சனமாக அமைந்துள்ளது. ப.வே. இராமகிருஷ்ணனின் "ஓடி விளையாடு பாப்பா" என்னும் கட்டுரை, மகாஹவி சுப்பிரமணியப் பாரதியாரின் "ஓடி விளையாடு பாப்பா" என்னும் பாடல் சிறுவர்களுக்கு ஒரு வழிகாட்டிளாக அமைந்துள்ளதாகக் கூறியுள்ளது.

## சிறுகதைகள்

சிறுகதை இலக்கியம் தொடர்பாக பா. சுதாஜிதாவின் "நவீன சிறுகதை உலகின் பிதாமகன் புதுமைப்பித்தன்" செ. யோகராசாவின் "மட்டக்களப்பு சிறுகதை வரலாற்றிலே புரட்சிக்கமாலின் சிறுகதைகள்", ச. மணிசேகரத்தின் "தேனகச் சிறுகதைகள் பார்வையும் பதிவும்" செ. யோகராசாவின்" ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் மட்டக்களப்பு எழுத்தாளர்களின் பங்கு" முதலான கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

பா. சுதாஜிதாவின் "நவீன சிறுகதை உலகின் பிதாமகன் புதுமைப்பித்தன்" என்னும் கட்டுரை, 1930களில் சிறுகதை உலகில் நுழைந்த புதுமைப்பித்தன் தனது சிறுகதைகளில் கையாண்ட சிறுகதை உத்திகளை வெளிப்படுத்தியுள்ளது. செ. யோகராசாவின் "மட்டக்களப்பு சிறுகதை வரலாற்றிலே புரட்சிக்கமாலின் சிறுகதைகள்" என்னும் கட்டுரை, கவிஞராக மட்டும் அறிப்பட்டிருந்த புரட்சிக்கமாலை முதன் முதல் முக்கிய சிறுகதை ஆளுமையாளராகப் பதிவு செய்துள்ளது. செ. யோகராசாவின்" ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் மட்டக்களப்பு எழுத்தாளர்களின் பங்கு" என்னும் கட்டுரை, ஈழத்து நவீன இலக்கியப் போக்குகளில் முக்கியம் பெறும் மட்டக்களப்பு சிறுகதை எழுத்தாளர்களின் கணிசமான பங்களிப்பைக் கூறியுள்ளது.

## நாவல்கள்

நாவல் இலக்கியம் குறித்து மைக்கல் கொலினின்" மண்முனை வடக்குப் பிரதேச நாவல்கள், சிறுகதைகள் அன்றும் இன்றும் "என்னும் கட்டுரை அமைந்துள்ளது. இக்கட்டுரை மட்டக்களப்பின் நாவல்கள் மற்றும் சிறுகதைகள் குறித்த மதிப்பீடொன்றை முன்வைத்துள்ளது. அந்தவகையில் நாவல்கள் குறித்து கூறும்போது மட்டக்களப்பில் மண்வாசனையுள்ள நாவல்கள் எழவில்லை எனக் கூறியுள்ளது. அதாவது மட்டக்களப்பில் ஆ.மு.சி. வேலழகன், அற்புதராஜா, திசேரா, ஓ. கே.குணநாதன், திமிலை மகாலிங்கம், ஆனந்தா, ஏ.ஜி. ராஜேந்திரம், மண்டூர் அசோகா, திமிலைத்துமிலன், தங்கன், வி.மைக்கல்கொலின் ஆகியோர்கள் நாவல்களைப் படைத்துள்ளதாகவும், ஆனால் "வெள்ளாவி", பாலமனோகரனின் "நிலக்கிளி என்னும் நாவல்களைப் போன்று மண்வாசனையுடன்

அமையவில்லையென்றும், சிறுகதைகள் குறித்துக் கூறும்போது, சிறுகதைகளின் கருத்துக்களில் போதாமை உண்டெனினும் திசேரா, மைக்கல் கொலின் ஆகியோரின் கதைகளை முன்வைத்து ஆக்கபூர்வமான நவீன மாற்றங்கள் வெளிப்பட்டுள்ளதென்றும் இக்கட்டுரை கூறியுள்ளது.

### சஞ்சிகைகள்

சஞ்சிகைகள் குறித்து" மட்டக்களப்பு பிரதேச சிறு சஞ்சிகைகள்", "மட்டக்களப்பு முதற்சஞ்சிகையாக பாரதி சஞ்சிகை: மூன்று பார்வைகள்", அன்புமணியின் மட்டக்களப்பில் மலர்ந்த சஞ்சிகைகள்", எஸ். எதிர்மன்ன சிங்கத்தின்" மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் சிற்றிதழ் வளர்ச்சிப் போக்கு பற்றிய பார்வை", றூபி வலன்ரீனா பிரான்சி ஸின்" இளைய விழிகள் சஞ்சிகை பற்றிய ஓர் அறிமுகம்", முத்தமிழ் விழா சிறப்பு மலர் (தேனகம்) ஒரு கண்ணோட்டம்", "தேனகம் - தொகுப்பும் மதிப்பீடும்" முதலான கட்டுரைகள் வெளிவந்துள்ளன. செ. யோகராசாவின்" மட்டக்களப்பு முதற்சஞ்சிகையாக பாரதி சஞ்சிகை: மூன்று பார்வைகள்" என்னும் கட்டுரை, மட்டக்களப்பு முதற்சஞ்சிகையாக மண்டூரிலிருந்து வெளிவந்த "பாரதி" சஞ்சிகையை அடையாளப்படுத்தியுள்ளது. அத்தோடு செ. யோகராசாவின் "மட்டக்களப்பு பிரதேச சிறு சஞ்சிகைகள்", அன்புமணியின் மட்டக்களப்பில் மலர்ந்த சஞ்சிகைகள்" மற்றும் எஸ். எதிர்மன்னசிங்கத்தின்" மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் சிற்றிதழ் வளர்ச்சிப் போக்கு பற்றிய பார்வை" என்னும் மூன்று கட்டுரைகளும், மட்டக்களப்பில் பின்வரும் சஞ்சிகைள் வெளிவந்துள்ளதைக் கூறியுள்ளன. அவையாவன பாரதி (1946), மலர் (1970), தொண்டன் (1970), கிழக்கொளி (1990), மலரும் வாழ்வு, காகித மலர், தாரகை (1981), சுமைதாங்கி (1983), களம் (1983), வயல் (1986), அரங்கம் (1995), போது, சுவைதிரள் (1993), செங்கதிர், பெண் (1999), தென்றல், மகுடம் (2012) என்பவனவாகும்.

றூபி வலன்ரீனா பிரான்சிஸின் "இளையவிழிகள் சஞ்சிகை பற்றிய ஓர் அறிமுகம்" என்னும் கட்டுரை, "இளையவிழிகள்" என்னும் கத்தோலிக்கச் சஞ்சிகையின் அறிமுகமாக அமைந்துள்ளது. அத்தோடு இவர் "தேனகம்" சஞ்சிகை குறித்தது இரண்டு மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளார். அவையாவன" முத்தமிழ் விழா சிறப்பு மலர் (தேனகம்) ஒரு கண்ணோட்டம்", "தேனகம் தொகுப்பும் மதிப்பீடும்" என்பனவாகும். இவற்றுள் முதலாவது கட்டுரை, 1993 தொடக்கம் 1999 வரையிலான காலப்பகுதியில் வெளிவந்த ஏழு "தேனகம்" சஞ்சிகைகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடாக அமைந்துள்ளது. இவ்மதிப்பீட்டினூடாக "தேனகம்" சஞ்சிகை, சிறுகதைகள், கவிதைகள், மற்றும் கட்டுரைகளுக்கு களமமைத்துக் கொடுத்துள்ளதென்பதை அறியமுடிந்துள்ளது. இரண்டாவது கட்டுரை, 1993 தொடக்கம் 2015 வரையிலான 22 "தேனகம்" சஞ்சிகைகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடாக அமைந்துள்ளது.

### நாட்டாரியல்

"தேனகம்" சஞ்சிகையில் நாட்டாரியல் தொடர்பான கட்டுரைகள் வாய்மொழிப் பாடல்கள் மற்றும் கதைகள், மட்டக்களப்பின் பாரம்பரியங்கள் என்பவற்றை முன்வைத்துள்ளன.

### வாய்மொழிப் பாடல்கள் மற்றும் கதைகள்

"தேனகம்" சஞ்சிகையில் வாய்மொழிப் பாடல்கள் மற்றும் கதைகள் தொடர்பாக திமிலைத்துமிலனின் தேனாட்டுக்கவிகளிலே செழுமை கொஞ்சும் அணிச்சுவைகள்", வ. சிவசுப்பிரமணியத்தின் "தொல்காப்பியத்தில்

வாய்மொழி இலக்கியத்தின் சுவடுகள்", "மட்டக்களப்புக் கவிகளும் நானும்", சா. முஹியித்தீனின் "மட்டக்களப்பு வாய்மொழி இலக்கியத்தின் வழிநடைச் சிந்து", றூபி வலன்ரீனா பிரான்சிஸின்" தமிழ் கத்தோலிக்க மரபில் புலம்பல், வேண்டுதலாக: ஒரு நோக்கு" முதலான கட்டுரைகளும், வாய்மொழிக் கதைகளை, டிலக்ஸ்மியின்" மட்டக்களப்பில் வழங்கும் சுனாமி பற்றிய வாய்மொழிக் கதைகள்" முதலான கட்டுரைகளும் அமைந்துள்ளன. திமிலைத்துமிலனின்" தேனாட்டுக்கவிகளிலே செழுமை கொஞ்சும் அணிச்சுவைகள்" என்னும் கட்டுரை, கவிஞர்களிடம் காணமுடியாத இலகுவான அணிநயங்களை இயற்கையோடு இணைந்த வாழ்க்கை வாழும் கிராமிய மக்களிடையே காணமுடியுமென்றும் கூறியுள்ளது. வ. சிவசுப்பிரமணியத்தின் "தொல்காப்பியத்தில் வாய்மொழி இலக்கியத்தின் சுவடுகள்" என்னும் கட்டுரை, தொல்காப்பியத்தில் வாய்மொழிச் சுவடுகள் இருந்துள்ளதைக் கூறியுள்ளது. இவருடைய "மட்டக்களப்புக் கவிகளும் நானும்" என்னும் கட்டுரை, கட்டுரையாசிரியர் தனது அனுபவத்தினூடாக மட்டக்களப்பு கவிகள் தொடர்பான கருத்துக்களை முன்வைத்துள்ளாரென்பதை வெளிக்காட்டியுள்ளது. சா. முஹியித்தீனின் "மட்டக்களப்பு வாய்மொழி இலக்கியத்தின் வழிநடைச் சிந்து" என்னும் கட்டுரை, மட்டக்களப்பு வாய்மொழி நாட்டார் இலக்கிய மரபில் வழிநடைச்சிந்து பெறும் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தியுள்ளது.

றூபி வலன்ரீனா பிரான்சிஸின் "தமிழ் கத்தோலிக்க மரபில் புலம்பல், வேண்டுதலாக: ஒரு நோக்கு" என்னும் கட்டுரை, கிழக்கு மகாணங்களில் குறிப்பாக மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தமிழ்க் கத்தோலிக்க மரபில் மரணச் சடங்குகளில் நெடுங்காலமாகப் பின்பற்றப்பட்டு வருவதும் அண்மைக்காலங்களில் வழக்கிழந்து வருவதும் "காதல் மரித்தோர் வேண்டுதல்" என்ற பெயரில் வழங்கப்பட்டு வந்துள்ள புலம்பல் குறித்த விபரங்களை வெளிப்படுத்தியுள்ளது.

டிலக்ஸ்மியின் "மட்டக்களப்பில் வழங்கும் சுனாமி பற்றிய வாய்மொழிக் கதைகள்" என்னும் கட்டுரை, 2004இல் இடம்பெற்ற சுனாமி தொடர்பான கதைகளை சுனாமியின் உருவாக்கம் தொடர்பான கதைகள், தெய்வ நம்பிக்கைக் கதைகள், அனுபவக்கதைகள், நகைச்சுவைக் கதைகள், சுசகுனம் தொடர்பான கதைகள் என பாகுபடுத்தி நோக்குகிறது.

**மட்டக்களப்பின் பாரம்பரியங்கள்**

மட்டக்களப்பின் பாரம்பரியங்களை வெளிப்படுத்தும் கட்டுரைகள், மட்டக்களப்பின் பாரம்பரியங்கள், பழக்கவழக்கங்கள், சடங்கு முறைகள், பாரம்பரிய விளையாட்டுக்கள், என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன. மட்டக்களப்பின் பாரம்பரியங்களை சு. திருமணிதேவியின் "பண்டைத்தமிழர் பழக்கவழக்க ஆசாரங்களும் அவற்றில் சுகாதாரமும், செ. சங்கீதாவின் "மட்டக்களப்பு தமிழ்மக்களின் சம்பிரதாயங்கள்", மகிழைமகேசனின் "மட்டக்களப்பு சார் பண்பாட்டில் வீடும் வாழ்வும்", றூபி வலன்ரீனா பிரான்சிஸின்" தொழில்கள்", எஸ். மோசஸின் "தொடர்பாடல்", கதிர் பாரதிதாசனின் "போக்குவரத்து", க. தங்கேஸ்வரியின் ஆடை ஆபரணங்கள்", ஞா. ராதாவின் "உணவு" தேனூரானின் "மட்டக்களப்பின் மரபும் மாற்றமும்- பழக்கவழக்கங்கள்", "மட்டக்களப்பில் மருந்தும் மாந்திரீகமும்", எஸ். எதிர்மன்னசிங்கத்தின்" இந்து சமய வழிபாட்டுச் சடங்குகள்", வ. இன்பமோகனின் "மாந்திரிகம்", திமிலைமகாலிங்கத்தின் "வேளாண்மைக் கலையில் சம்பிரதாயங்கள்" முதலான கட்டுரைகள் முன்வைத்துள்ளன.

சு. திருமணிதேவியின் "பண்டைத்தமிழர் பழக்கவழக்க ஆசாரங்களும் அவற்றில் சுகாதாரமும், என்னும் கட்டுரை, தமிழ் மக்களின் பழக்கவழக்கங்கள் ஒவ்வொன்றிலும் சுகாதாரங்கள் பேணப்பட்டு வந்துள்ளதாகக் கூறியுள்ளது. செ. சங்கீதாவின் "மட்டக்களப்பு தமிழ்மக்களின் சம்பிரதாயங்கள்" என்னும் கட்டுரை, மட்டக்களப்புவாழ் மக்களின் சம்பிரதாயங்களைக் கூறியுள்ளது. தேனுராானின்" மட்டக்களப்பின் மரபும் மாற்றமும்-பழக்கவழக்கங்கள்" என்னும் கட்டுரை, மட்டக்களப்பு மக்கள் மத்தியில் வழங்கும் பழக்கவழக்கங்கள் தற்பொழு மாற்றமடைந்துளதென்று கூறியுள்ளது.

மகிழைமகேசனின் "மட்டக்களப்பு சார் பண்பாட்டில் வீடும் வாழ்வும்" என்னும் கட்டுரை, மட்டக்களப்பில் வீடுகள் எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளன என்பது தொடர்பான வரலாற்றையும் வீடுகளில் மேற்கொள்ளப்படும் சடங்குகளையும் வெளிப்படுத்தியுள்ளது. றூபி வலன்ரீனா பிரான்சி ஸின் "தொழில்கள்" என்னும் கட்டுரை, 1950கள் தொடக்கம் இற்றை வரையிலான தொழில் நிலைமைகள் குறித்ததாக அமைந்துள்ளது.

எஸ். மோசஸின்" தொடர்பாடல் என்னும் கட்டுரை, மட்டக்களப்பில் மரபு வழி சார்ந்த தொடர்பாடல் சாதனங்களாக சைககள், குறியீடுகள், அடையாளங்கள், கலைகள் என்பன காணப்பட்டுள்ளன என்றும், தற்பொழுது இவ்வாறான தொடர்பாடல் சாதனங்கள் வீழ்ச்சியடைந்த நிலையிலே காணப்பட்டுள்ளதென்றும் கூறியுள்ளது. கதிர் பாரதிதாசனின் "போக்குவரத்து" என்னும் கட்டுரை, மட்டக்களப்பில் பாரம்பரிய போக்குவரத்து முறைகளாக நடைப்பயணம், மாட்டுவண்டிப் பயணம், தோணி, வள்ளங்களில் பயணம் என்பன காணப்பட்டுள்ளதாகவும், ஆனால் தற்பொழுது விமானப் போக்குவரத்து வசதியும் காணப்பட்டுள்ளதாகப் பதிவு செய்துள்ளது.

க. தங்கேஸ்வரியின் ஆடை ஆபரணங்கள்" என்னும் கட்டுரை, பாரம்பரியமான ஆடை ஆபரணங்களின் மாற்றங்களையும், ஞா. ராதாவின் "உணவு" என்னும் கட் டுரை, பாரம்பரிய உணவில் ஏற்பட்ட மாற்றங்களையும், எஸ். எதிர்மன்ன சிங்கத்தின் "இந்து சமய வழிபாட்டுச்சடங்குகள்" என்னும் கட்டுரை, இந்து சமய மக்கள் மத்தியில் பாரம்பரிய சடங்கு முறைகளில் ஏற்பட்ட மாற்றங்களையும், வ. இன்பமோகனின் "மாந்திரிகம்" என்னும் கட்டுரை தற்பொழுது மாந்திரிகக் கலை அருகிக்கொண்டு செல்வதையும் வெளிப்படுத்தியுள்ளன. திமிலைமாலிங்கத்தின் "வேளாண்மைக் கலையில் சம்பிரதாயங்கள்" என்னும் கட்டுரையில், நவீனத் தொழில்நுட்பங்கள் வளர்ச்சியடைந்துள்ள போதிலும் விவசாயிகள் பாரம்பரியமான முறைகளைப் பின்பற்றியுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

**சமூகம்**

சமூகம் தொடர்பான கட்டுரைகள் மட்டக்களப்பில் வாழ்ந்துள்ள பறங்கியர், முஸ்லிம், முக்குவர், பறையர் சமூகங்களைக் பற்றியதாக அமைந்துள்ளன. அந்தவகையில் பறங்கியர் சமூகத்தை இரா. துரைரத்தினத்தின் "மட்டக்களப்பில் பறங்கியர் இனம்", ஸ்ரான்லி பிரபாகரனின் "மட்டக்களப்பு பறங்கியர்", முதலான கட்டுரைகளும், முஸ்லிம் சமூகத்தை எம். மஹ்றூப் கரீமின் "மட்டக்களப்புத் தமிழகத்தில் முஸ்லிம்கள்" என்னும் கட்டுரையும், முக்குவர் சமூகத்தை சி. சின்னத்தம்பியின் "முக்குவச் சட்டம்", எம். மகேஸ்வரியின்" வழக்கொழிந்த சட்டமும் வாழும் வழக்காறுகளும்: முக்குவர் சட்டம் பற்றிய சிறு சிந்தனைகள்" என்னும் கட்டுரைகளும், பறையர் சமூகத்தை தேனுராானின் "மட்டக்களப்பில் வாழும் பறையர் சமூகம்" என்னும் கட்டுரையும் வெளிப்படுத்தியுள்ளன.

இரா. துரை ரத்தினத்தின் "மட்டக்களப்பில் பறங்கியர் இனம்", ஸ்ரான்லி பிரபாகரனின்

“மட்டக்களப்பு பறங்கியர்” என்னும் இரண்டு கட்டுரைகளும் மட்டக்களப்பில் வாழ்ந்துள்ள பறங்கின மக்களின் மொழி, தொழில் பற்றியதாக அமைந்துள்ளன. எம். மஹ்றூப் கரீமின் “மட்டக்களப்புத் தமிழகத்தில் முஸ்லிம்கள்” என்னும் கட்டுரை, அரேபியர்களின் வழித்தோன்றலில் தோன்றியவர்களே முஸ்லிம்களென்றும், போர்த்துக்கயரின் ஆட்சியின்போது கி.பி 1605- 1635 வரையான காலப்பகுதிக்குள் மட்டக்களப்பின் சம்மாந்துறை, துறைநீலாவணை என்னும் இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளார்கயென்றும், தற்பொழு முஸ்லிம்கள் செறிந்து வாழும் இடமாக காத்தான்குடி காணப்பட்டுள்ளதென்றும், முஸ்லிம் மக்களின் வரலாறு மற்றும் அவர்களின் சடங்கு முறைகளையும் குறிப்பிட்டுள்ளது. முக்குவர் சமூகத்தை சி. சின்னத்தம்பியின் “முக்குவச் சட்டம்” என்னும் கட்டுரை, இந்தியாவிலிருந்து மலபார் கரையிலிருந்து வந்து குடியேறிய மலாயர்களே முக்குவர் என்று அழைக்கப்பட்டுள்ளார்களென்றும், யாழ்ப்பாணத்தில் குடியேறிய முக்குவர்கள் தேசவழமைச்சட்டத்தாலும், மட்டக்களப்பில் குடியேறியவர்கள் முக்குவச் சட்டத்தாலும், ஒல்லாந்தர்களினால் ஆளப்பட்டுள்ளார்களென்றும் கூறியுள்ளது. எம். மகேஸ்வரியின் “வழக்கொழிந்த சட்டமும் வாழும் வழக்காறுகளும்: முக்குவர் சட்டம் பற்றிய சிறு சிந்தனைகள்” என்னும் கட்டுரை, முக்குகுவர்களின் சட்டங்களையும், அச்சட்டங்கள் வழக்கொழிந்த நிலையில் காணப்பட்டுள்ளதையும் கூறுயுள்ளது.

பறையர் சமூகத்தைத் தேனூரானின் “மட்டக்களப்பில் வாழும் பறையர் சமூகம்” என்னும் கட்டுரை, மட்டக்களப்பில் வாழ்ந்துள்ள பறையர்கள் தொன்று தொட்டு வாழ்ந்துள்ள தமிழர்களின் தொல்குடி என்றும், இந்தியாவிலிருந்து வந்து மட்டக்களப்பில் குடியேற்றப்பட்டுள்ள வேளாளர், மற்றும் முக்குவர்களுக்கு பணிவிடை செய்யும் முகமாக மட்டக்களப்பில் குடியமர்த்தப்பட்டுள்ளார்களென்றும், இவர்களது பிரதான தொழில் பறையடித்தல் என்றும் பெரும்பாலான பறையர்கள் தற்பொழுது தொழில் நிலையில் அசமந்தப் போக்கை எதிர்நோக்கியுள்ளார்களென்றும் கூறியுள்ளது.

### தனிநபர் ஆளுமைகள்

“தேனகம்” சஞ்சிகையில் ஷா, மாஸ்டர் சிவலிங்கம், சுவாமி விபுலானந்தர், ராஜபாரதி, டி.ஜி சோமசுந்தரம், நீலாவணன், மு. சிவபாலன், வீ. ஆனந்தன், சுபந்திரன், அந்தோனிப்பிள்ளை, திரவியம், தம்பிமுத்து பித்தன் முதலானோரின் ஆளுமையை வெளிப்டுத்தும் கட்டுரைகள் அமைந்துள்ளன. செழியன். ஜே. பேரின்ப நாயகத்தின் “புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை என்ற பெருங்கம்பன்” என்னும் கட்டுரை, புலவர்மணிப் பெரியதம்பிப் பிள்ளை சிறந்த கவிஞரென்றும், இவர் சுவாமி விபுலானந்த அடிகளாரிடம் பாடல்களைப் பயின்றுள்ளாரென்றும் கூறியுள்ளது. மட்டுநகர் முத்தழகுவின் “இரும்பரசன் சாண்டோ சங்கரதாஸ்” என்னும் கட்டுரை, மட்டக்களப்பில் பிறந்த இரும்பரசன் சாண்டோ சங்கரதாஸ் அவர்களின் சாதனைகளை வெளிப்படுத்தியுள்ளது.

ரீ. பாக்கியநாயகத்தின் “கே.எம். ஷா பற்றிய நினைவுக் குறிப்புக்கள்” என்னும் கட்டுரை, கே.எம். ஷா அவர்களின் இலக்கிய ஆளுமைகளைக் கூறுகிறது. மாஸ்டர் சிவலிங்கத்தின் சிறுவர் இலக்கியத் துறையில் எனது வழிகாட்டி” என்னும் கட்டுரை, எஸ்.டி. சிவசேகரம் பற்றியதாக அமைந்துள்ளது. அன்புமணியின் “கவிதைக் கலைஞர் ராஜபாரதி” என்னும் கட்டுரை, ராஜபாரதியின் கவிதைச் சிறப்புக்களைக் கூறியுள்ளது. செ. யோகராசாவின் “எழுத்துலகில் டி.ஜி சோமசுந்தரம்” என்னும் கட்டுரை, டி.ஜி சோமசுந்தரத்தை கவிஞராக, மொழிபெயர்ப்பாளராக, கட் டுரையாசிரியராக இனங்காட்டியுள்ளது.

றூபி வலன்ரீனா பிரான்சிஸின் நீலாவணனின் படைப்புலகம்" என்னும் கட்டுரை, நீலாவணனின் படைப்புக்களை வெளிப்படுத்தியுள்ளது. காசுபதி நடராசாவின் "விமர்சன காவியம் வீ. ஆனந்தன்" என்னும் கட்டுரை, வீ. ஆனந்தன் இருபது மலையாளச் சிறுகதைகளை மொழிபெயர்த்துள்ளாரென்றும், இருபது கவிதைகளை எழுதியுள்ளாரென்றும் இதனூடாக மட்டக்களப்பின் கலை இலக்கிய வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்துள்ளாரென்றும் கூறியுள்ளது. சி. மௌனகுருவின் "மண்முனை வடக்குப் பிரதேசத்தில் வாழ்ந்த ஓர் மக்கள் கவிஞன்" என்னும் கட்டுரை, சுபத்திரத்திரனை மட்டக்களப்பின் சிறந்த கவிஞராக இனங்காட்டியுள்ளது.

### கல்வி

கல்வி தொடர்பாக செ. யோகராசாவின் "மட்டக்களப்புப் பிரதேச பாரம்பரியக் கல்வி வளர்ச்சி- சில அவதானங்கள்", தி. ஹரிதாஸின் "மட்டக்களப்புக் கல்விநிலை", ஏ.எஸ் யோகராஜாவின் சிறந்த இடைவினைத் தொடர்புகொண்ட ஆசிரியர்களும் பயன்மிகு வகுப்பறைச் செயற்பாடுகளும்", தி. மேகராஜின்" ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்தியின் முக்கியத்துவமும் பெற்றோரின் பங்களிப்பும்" முதலான கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

செ. யோகராசாவின் "மட்டக்களப்புப் பிரதேச பாரம்பரியக் கல்வி வளர்ச்சி-சில அவதானங்கள்" என்னும் கட்டுரை, பாரம்பரியக் கல்வி முறைகள் பற்றிய அவதானிப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக அமைந்துள்ளது. தி.ஹரிதாஸின் "மட்டக்களப்புக் கல்விநிலை" என்னும் கட்டுரை, 1993 தொடக்கம் 1998 வரையிலான காலப்பகுதியில் மட்டக்களப்பின் கல்வி நிலையை வெளிப்படுத்தியுள்ளது.

ஏ.எஸ் யோகராஜாவின் "சிறந்த இடைவினைத் தொடர்பு கொண்ட ஆசிரியர்களும் பயன்மிகு வகுப்பறைச் செயற்பாடுகளும்" என்னும் கட்டுரை, நற்பண்பு கொண்ட மாணவர்களை உருவாக்குவது ஒவ்வொரு ஆசிரியர்களதும் கடமை என்பதை வலியுறுத்தியுள்ளது. ஏதி. மேகராஜின் "ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்தியின் முக்கியத்துவமும் பெற்றோரின் பங்களிப்பும்" என்னும் கட்டுரை, தாயின் கருவறை தொடக்கம் ஐந்து வயது வரையிலான காலப்பகுதியில் பிள்ளையின் அபிவிருத்தி மற்றும் கல்வி வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் பெற்றோர்கள் என்பதை வலியுறுத்தியுள்ளது.

### முடிவுரை

"தேனகம்" சஞ்சிகையில் வெளிவந்த வரலாற்றுக் கட்டுரைகள் மட்டக்களப்புப் பிரதேசத்தின் வரலாற்றினைப் பதிவு செய்வனவாகவே அமைந்துள்ளன. இக்கட்டுரைகளினூடாக மட்டக்களப்பானது கிழக்குக் கரையோரம் அமைந்துள்ள முக்கியமான நகரமென்பதையும், கல்லடிப் பாலத்தை பௌர்ணமி வேளைகளில் அவதானிக்கும்போது ஓர் இன்னிசை ஒலி கேட்டுள்ளதாகவும் அதனால் அதற்கு மீன்பாடும் தேனாடாம் என்று அழைக்கப்பட்டுள்ளது என்பதையும், இற்றைக்கு 2500 வருடங்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் பூர்வீகக் குடிகள் வாழ்ந்துள்ளார்களென்பதையும், தொலமியின் வரைபடத்தில் (கி.பி 90-168) மட்டக்களப்பு உள்ளிட்ட கரையோரப்பகுதியை நாகதீபம் என்று அழைத்துள்ளாரென்பதையும், விஜயன் கி.மு 540இல் பாண்டிய நாட்டிலிருந்து அழைத்து வந்துள்ள தமிழர்களை கதிரவெளியில் குடியேற்றியுள்ளாரென்பதையும், மேலும் இயக்கர், புலியமாறன், திமிலர் ஆகியோர்கள் வாழ்ந்துள்ளார்களென்பதையும், 1622இல் போர்த்துக்கேயரின் ஆட்சியும், 1637இல் ஒல்லாந்தரின் ஆட்சியும், 1802இல் ஆங்கிலேயரின் ஆட்சியும் மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளதோடு இவர்களுடைய ஆட்சியினால் மட்டக்களப்புக்

கோட்டை, துறைமுகங்கள் என்பன பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்துள்ளது என்பதையும் ஆங்கிலேயரின் வருகையினால், பாட சாலைகள், வணக்கஸ்தலங்கள் என்பன மட்டக்களப்பில் அமைக்கப்பபட்டுள்ளது என்பதையும் அறிமுடிகிறது. இவ்வாறு வரலாற்றுக் கட்டுரைகள் மட்டக்களப்பின் வரலாற்றைத்தெளிவாகவெளிப்படுத்தியுள்ளதைக் காணலாம்.

கலை சார்ந்த கட்டுரைகள் நாடகம், நடனம், ஓவியம், ஏனையகலைகளான இசை, சோதிடம், களிகம்பு, கட்டிடம், சிலம்பு, மாந்திரீகம், சினிமா தொடர்பானதாக அமைந்துள்ளன. கூத்துக்கலை தொடர்பான கட்டுரைகளினூடாக மட்டக்களப்பில் வாழ்கின்ற மக்களின் பாரம்பரிய கூத்தக்கலை வடிவமாக வடமோடிக் கூத்துக்களும், தென்மோடிக் கூத்துக்களும் காணப்பட்டுள்ளதையும், கூத்துக்கலையில் ஒப்பனை செய்யும் கலைஞர்களும், கூத்துக்கலை நெறிப்படுத்தும் நெறியாளர்கள் அவசியமென்பதையும், தற்பொழுது இக்கலை மக்கள் மத்தியில் அருகிக் கொண்டு செல்வதாகவும், ஆகையால் இக்கலையைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்பதையும் அறிய முடிகிறது.

அத்தோடு, நாடகக் கலையானது 1970களில் மட்டக்களப்பில் பொழுதுபோக்காக நடிக்கப்பட்டுள்ளதென்றும், 1980களில் மட்டக்களப்பில் நவீன நாடக முயற்சி கைவிடப்பட்டுள்ளதென்றும், 1990களுக்குப் பின்பு மட்டக்களப்பில் நவீன நாடக முயற்சிகள் இடம்பெற்றுள்ளதாகவும் கூறியுள்ளது. இதனூடாக மட்டக்களப்பில் நவீன நாடக முயற்சிகள் 1990களுக்குப் பின்பே சிறப்பானதொரு வளர்ச்சியைப் பெற்றுள்ளதென்பதையும், தற்பொழுது மட்டக்களப்பில் நாடகக் கலையை வளர்த்தெடுக்கும் நோக்கில் மட்டக்களப்பு மண்முனை வடக்கு கலாசாரப் பேரவையினால் முத்தமிழ் விழா சிறப்பு மலரான “தேனகம்” சஞ்சிகை வெளியீட்டையொட்டி பாட சாலை மாணவர்களுக்கிடையிலான நாடகப் போட்டிகளை நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதேபோன்று நடனம், ஓவியம், இசை, சோதிடம், களிகம்பு, கட்டிடம், சிலம்பு, மாந்திரீகம், சினிமா என்னும் கலைகளும் மட்டக்களப்பில் வளர்ச்சியடைந்துள்ளதைக் காணலாம்.

இலக்கியம் சார்பான கட்டுரைகளினூடாக மட்டக்களப்பில் அரங்கநாயகி என்னும் நாவல், மற்றும் இராமர் அம்மானை, இராமர் கதை போன்ற நூல்கள் காணப்பட்டுள்ளதையும், அத்தோடு மட்டக்களப்பிக் கவிதை வளர்ச்சிக்கு வீ. ஆனந்தன், புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை, மகாகவி பாரதி, வாசுதேவன் முதலானோரின் கவிதைகள் வளம் சேர்த்துள்ளன என்பதையும், ஈழத்தின் சிறுகதை வளர்ச்சியில் புதுமைப்பித்தன், புரட்சிகமால், புகலிட எழுத்தாளரான எஸ். போ முதலானோர்கள் குறிப்பிடத்தககவர்கள் என்பதையும், அதேபோன்று மட்டக்களப்பில் நாவல்கள் குறித்து நோக்கும்போது மண்வாசனையுள்ள நாவல்கள் எழவில்லை என்பதையும் அறிய முடிந்துள்ளது.

அத்தோடு சஞ்சிகைகள் குறித்து நோக்கும்போது ஈழத்தில் குறிப்பாக மட்டக்களப்பில் மலர் (1970), தொண்டன் (1970), கிழக்கொளி (1990), மலரும் வாழ்வு, காகித மலர், இளையவிழி, தாரகை (1981), சுமைதாங்கி (1983), களம் (1983), வயல் (1986), அரங்கம் (1995), போது, சுவைதிரள் (1993), செங்கதிர், பெண் (1999), தென்றல், மகுடம் (2012), தேனகம் (1993) என்னும் சஞ்சிகைகள் வெளிவந்துள்ளதை அறியலாம்.

நாட்டாரியல் தொடர்பான கட்டுரைகள் மட்டக்களப்பு வாழ் கிராமிய மக்களின் வாய்மொழிப் பாடல்கள், விளையாட்டுக்கள், பழக்கவழக்கங்கள், மாந்திரீகச் செயற்பாடுகள் முதலியவற்றை உள்ளடக்கியுள்ளன. தனிநபர் ஆளுமைகள் தொடர்பான கட்டுரைகள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் வாழ்ந்த தனி நபர்களின் உதாரணமாக சுவாமி விபுலானந்தர், இரும்பரசன் சாண்டோ போன்றோரின் ஆளுமைகளை வெளிப்படுத்தியுள்ளன.

கல்வி தொடர்பான கட்டுரைகளினூடாக ஆரம்பத்தில் மட்டக்களப்பில் திண்ணைக்கல்வி, தொழிற்கல்வி போன்றவற்றிலிருந்து தற்பொழுது கல்வி முறைகள் வளர்ச்சியடைந்துள்ளதை அறிய முடிந்துள்ளது. அதாவது தற்பொழுது மட்டக்களப்பில் 233 பாடசாலைகள் காணப்படுகின்றன. இவற்றுள் மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம், மட்டக்களப்பு விவேகானந்தா பெண்கள் மகா வித்தியாலயம், மட்டக்களப்பு இந்துக் கல்லூரி, புனித மிக்கேல் கல்லூரி, மெதடிஸ் மத்திய கல்லூரி, சிசிலியா பெண்கள் பாடசாலை, வின்சன்ட் பெண்கள் பாடசாலை என்பன தேசிய பாடசாலைகளாகும். இப்பாடசாலைகளில் 2008ம் ஆண்டு புள்ளி விபரத்தின்படி 11895 மாணவர்கள் கல்வி கற்றுள்ளார்களென்பது குறிப்பிடத்தக்கது. சமூகம் தொடர்பான கட்டுரைகள் தமிழ், முஸ்லிம், பறங்கியர், மற்றும் முக்குவர் சமூகங்கள் பற்றியதாக அமைந்துள்ளன.

## உசாத்துணை நூல்கள்

1. முத்தமிழ் விழா சிறப்பு மலர் (தேனகம்), (1993 - 2017), கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், மண்முனை வடக்கு, மட்டக்களப்பு.
2. கருணையோகம் (பணி நயப்பு விழா சிறப்பு மலர்), (2016), பணி நயப்பு விழாச் சபை, மட்டக்களப்பு.

## கட்டுரைகள்

1. றூபி வலன்ரீனா பிரான்சிஸ், (2017), தேனகம் ஒரு மதிப்பீடு, தேனகம், பிரதேச செயலகம், மண்முனை வடக்கு, மட்டக்களப்பு.